<u>மன்றப்பொருள்</u>

2020 ம் ஆண்டு டிசம்பர் 31.12.2020 ம் தேதி வியாழன் கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற **சாதாரணக்கூட்டம்** பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை.

**திரு.ரா. சிவசங்கரன்**
**தனி அலுவலர்.**

1. ஆணையர் (பொ) அவர்களின் டிசம்பர் 2020ம் மாத நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம்**

2. பண்ணுருட்டி நகராட்சியில் உள்ள கணிணி மற்றும் கணிணி சார்ந்த சாதனங்கள் பழுது ஏற்படாமலும், நிர்வாக பணிகள் பாதிப்பு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும் ஆண்டு பராமரிப்பு பணி (AMC) 01.12.2020 முதல் மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 2,45,000/– GST உள்பட (ரூபாய் இரண்டு லட்சத்து நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) ஆகும். மேற்சொன்ன செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (AMC) ஆண்டு பராமரிப்பின் கீழ்வரும் கணிணிகள் மற்றும் கணிணி சார்ந்த சாதனங்கள்

1. கணிணி (Computer) = 27 எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| 1. | HP Laser Printer | = 10 எண்ணிக்கை |
| 2. | TVS Printer | = 2 எண்ணிக்கை |
| 3. | Laptop | = 1 எண்ணிக்கை |
| 4. | Switch | = 5 எண்ணிக்கை |
| 5. | Wifi Router | = 2 எண்ணிக்கை |
| 6. | Copier | = 2 எண்ணிக்கை |
| 7. | Network & Networking Panel | = 3 எண்ணிக்கை |
| 8. | Camera மற்றும் DVR | = 1 எண்ணிக்கை |
| 9. | Epson Printer ( L6170) | = 2 எண்ணிக்கை |
| | மொத்தம் | = 55 எண்ணிக்கைகள் |

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
கோ.எண்.

3. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 33 வரையுள்ள பொதுமக்களுக்கு பல்வேறு கொள்ளளவுள்ள 18 எண்ணிக்கைகள் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் குடிநீர் ஏற்றப்பட் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட குடிநீர் அத்தியாவசிய பணிக்கு போதிய பணியாளர்கள் (Tank Operator) இல்லாததால் இந்நகராட்சி மூலம் காலை மற்றும் மாலை இருவேளைகளிலும் குடிநீர் விநியோகம் செய்ய சிரமம் ஏற்படுகிறது. எனவே, பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசியம் கருதி 2020–21–ம் ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நிர்ணயிக்கப்பட்ட விலைவிகித அடிப்படையிலும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில் குடிநீர் அத்தியாவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை 2019–2020–ம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட அதே விலைவிகிதப்படி ஒப்பந்தப் பணியாளர்களுக்கு தொகை வழங்க ஏற்கனவே நகரமன்றத் தீர்மான எண். 513 நாள். 31.08.2020–ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, அதனடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு கால அவகாசம் தேவைப்பட்டதால், மேற்கண்ட விலைவிகிதத்தின் அடிப்படையில் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மூன்று மாதங்களுக்கு (Tank Operator) செலவினம் ரூ. 2,59,259/– நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 1880/2020/இ2**

4. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08 ரத்தினம் பிள்ளை மார்க்கெட் பகுதியில் செயல்பட்டு வரும் மீன் மார்க்கெட் கட்டிடமானது பழுதடைந்து மிகவும் கீலகமான நிலையில் பயன்படுத்த இயலாத அளவிற்கு

பொதுமக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் வண்ணம் உள்ளது. எனவே, அசம்பாவிதங்கள் ஏற்படும் முன்பே மேற்கண்ட மீன் மார்க்கெட் கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண் : 2089 /இ1 /2020**

5. பண்ணுருட்டி நகராட்சி நிவர் புயல்–2020 நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களின் அலுவலக கடித ந.க.எண். 21976/2020/இ2 நாள். 10.12.2020–ன்படி பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழையான நிவர் புயல் 2020–ல் ஏற்பட்ட பாதிப்புகளை சீரமைக்க SDRF –2020 திட்டத்தின்கீழ் ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. மேலும் இந்நகராட்சியில் புயலால் பாதிப்பு ஏற்பட்ட சாலைகள் மற்றும் தெருவிளக்குகளை சீரமைக்க கீழ்கண்ட இடங்கள் தேர்வு செய்யப்பட்டு உத்தேச மதிப்பீடு ரூ.5.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ள விவரம் வருமாறு.

1. வார்டு எண். 11 இரயில்வே காலனி பகுதியில் பழுதடைந்த சாலையை கான்கிரீட் சிமெண்ட் (CC Road) மற்றும் சிறுபாலங்கள் (Culvert) அமைத்தல் மற்றும் வார்டு எண்.01 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் புயலால் பாதிப்பு ஏற்பட்ட தெருவிளக்குகளை அகற்றி புதியதாக 30W/48W LED விளக்குகள் அமைத்தல் பணிக்கு ரூ. 5.00 இலட்சம்.

எனவே, மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ஒதுக்கீடு செய்து வரப்பெற்ற கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண் : 1954 /இ1 /2020**

6 பண்ணுருட்டி நகராட்சியில் 2020–21–ம் ஆண்டு 01.10.2020 முதல் 31.03.2021 வரையிலான காலங்களுக்கு ஒப்பந்த பணிக்காக பிடித்தம் செய்யப்பட்ட GST தொகையினை GSTக்கான வலைதளத்தில் பதிவேற்றம் மற்றும் பதிவிறக்கம் செய்யவும் ஒப்பந்ததாரர் GST தொகை ஒப்பந்ததாரர் TIN எண்ணில் பதிவேற்றம் செய்து (E-Filing) செய்ய தோராய செலவினம் தொகை ரூ. 20,000/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**கோ.எண். 3460/18/பி1**

7. பண்ணுருட்டி நகராட்சியில் 2020–21ம் ஆண்டு 01.10.2020 முதல் 31.03.2021 வரையிலான இரண்டு காலாண்டுகளுக்கு ஒப்பந்த பணிக்காக பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரித் தொகையினை வருமான வரித்துறைக்கான வலைதளத்தில் வருமான வரி கணக்கில் பதிவேற்றம் மற்றும் பதிவிறக்கம் செய்யவும் வங்கி வருமான வரி கணக்குடன் ஒப்பிட்டு சரி செய்து (E-Filing) செய்ய தோராய செலவினம் தொகை ரூ. 75,000/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**கோ.எண். 2511/17/பி1**

8. பண்ணுருட்டி நகராட்சியில் எல்லைக்குள் இருக்கும் நகராட்சியால் குத்தகைக்கு விடப்பட்டுள்ள ரத்தினம் பிள்ளை நாளங்காடி அமைந்துள்ள இடம் திருவாளர்கள் சி.டி.சபாபதி டிரஸ்டுக்கு பாத்தியப்பட்ட இடமாகும்.மேற்கண்ட இட உரிமையாளர்கள் பல ஆண்டுகளுக்கு வாடகை ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டு வாடகை பெற்று வந்துள்ளனர். மேற்கண்ட வாடகை ஒப்பந்த பத்திரம் கடைசியாக 20.08.2014–ல் பதிவு செய்யப்படாமல் ஒப்பந்தம் மூலம் நகராட்சி ஆணையாளருக்கு 1. திரு. ஆர்.சி. பழனிவேல் செட்டியார் 2. திரு. சி.டி.சபாபதி செட்டியார் 3. திரு. சி.டி.சீனுவாசன் ஆகிய மூவரும் சேர்ந்து நகராட்சி ஆணையருக்கு 01.04.2014 முதல் 31.03.2027 வரை மாதம் ஒன்றுக்கு வாடகை ரூ.12500/– ஒவ்வொரு ஐந்து வருடத்திற்கு ஒருமுறை அப்போதைய மாத வாடகை தொகையில் 10 சதவீதம் உயர்த்தியும் மாதாந்திர வாடகை தொகை கொடுத்து வந்த 15 வருட கெடு முடிவில் வேறு வாடகை பத்திரத்தின் மூலம் புதுப்பித்து கொள்ள வேண்டியது என போடப்பட்டுள்ளது.

அதன்படி மாதாந்திர வாடகை ரூ.13750/– வீதம் 01.04.2020 முதல் 31.03.2021 வரை முடிய 12 மாத காலத்திற்கு (13750x12=165000) (ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்து ஐந்தாயிரம் மட்டில்) மேற்கண்ட நபருக்கு குத்தகை தொகை வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மேற்கண்ட ஒப்பந்தத்தின்படி ரூ.1,65,000/– வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 3096/08/பி4**

**9.** இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனத்திற்கு காப்பீடு டிசம்பர் 2020–ல் முடிவடைவதால் கீழ்கண்ட வாகனங்களுக்கு காப்பீடு தொகையை 'யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ், கோ லிட்.,' செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வாகனத்தின் எண்கள் | தொகை |
|---|---|---|
| 1 | TN-31 BM 8024 | 17,902.00 |
| 2 | TN-31 BM 8164 | 21,296.00 |
| 3 | TN-31 BM 7864 | 36,543.00 |
| 4 | TN-31 BM 8052 | 17,902.00 |
| 5 | TN-31 BM 8044 | 17,902.00 |
| | | 1,11.545.00 |

**அலுவலக குறிப்பு :** **1.** பொது சுகாதாரப்பணி என்பதால் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று காப்பீடு தொகை செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

2. ரூ. 1,11,545/–யை இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 2008/2020/எச்1**

**10.** பண்ணுருட்டியில் இயங்கி வரும் அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு ரூ.12/– சுங்க வசூல் நகராட்சி மூலம் செய்யப்பட்டு வரும் நிலையில் டோக்கன் தேவைப்படும் நிலையில் முன்னர் அச்சடித்து தந்த நபரிடம் 450001 முதல் 480000 வரை 30000 எண்ணிக்கை அச்சடிக்கும் பணிக்கு திரு. வெங்கடேசன் என்பவருக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2.** அவசர அவசியம் கருதி டோக்கன் புக் 100 எண்ணிக்கை தலா 90 விகிதம் மொத்தம் 9000/– வழங்க தனி அலுவலர் அனுமதித்ததினை மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண்.**

**11.** இந்நகராட்சியில் நிவர் புயல் SDRF நிதி 2020–21–ன்கீழ் வார்டு எண்.11 இரயில்வே காலனி பகுதியில் பழுதடைந்த சாலையை கான்கிரீட் சிமெண்ட் சாலை (CC Road) மற்றும் சிறுபாலங்கள் (Culverts) அமைத்தல் மற்றும் வார்டு எண்.01 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் புயலால் பாதிப்பு ஏற்பட்ட தெரு விளக்குகளை அகற்றி புதியதாக 30W / 48 W LED விளக்குகள் அமைத்தல் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் ந.க.எண். 21976/2020/இ2 நாள். 16.12.2020–ல் நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கி உள்ளதிற்கிணங்க 29.12.2020–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | திரு. ஆர்.ராம்குமார் | 5.00 | 0.05 % குறைவு |
| 2 | திரு. என்.ஆர்.முருகன் | 5.00 | 0.19 % அதிகம் |

**அலுவலக குறிப்பு :** **1.** வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. ஆர்.ராம்குமார் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.05 % சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 1954 / 2020 / இ1**

12. பண்ணுருட்டி நகராட்சியில் BOV வாகன எண். 1/30, 8/30, 24/30, 17/30, (VSL No. 2955, 2976, 2889, 2800) ஆகிய வாகனங்களில் மோட்டார் செட், கன்வெர்ட்டர், ஒயர் கிட், கிளட்சி கிட், கிரவுண்ட் ரீ–ஒர்க், கீ–செட், ஒயரிங் கிட், கிரவுன் ஆக்சில் ஆகிய பழுதுகள் ஏற்பட்டுள்ளதால், இதனை உடடினயாக சரி செய்யும் பொருட்டும் கொரோனா காலமாக உள்ளதாலும், தொடர்ந்து பருவ மழைக காலங்களாக உள்ளதாலும் டெங்கு போன்ற தொற்று நோய்கள் பரவும் வாய்ப்புள்ளதால், பொது சுகாதாரம் மற்றும் பொதுமக்கள் நலன், அவசர அவசியம் கருதி உடனடியாக சரி செய்ய 14.12.2020 அன்று கோரப்பட்ட விலைப்புள்ளிகளில் RGM ஆட்டோ ஒர்க்ஸ், நெ.32, அன்னை இந்திரா காந்தி சாலை, திருவெண்ணெய்நல்லூர், விழுப்புரம் மாவட்டம் அவர்கள் கொடுத்துள்ள விலைப்புள்ளி மிகவும் குறைவாக உள்ளதால், மேற்கண்ட நிறுவனத்திற்கு வேலை உத்திரவு ஆணையரின் முன் அனுமதி பெற்று வழங்குவதற்கும், அதற்குண்டான செலவினத்தொகை ரூ.47,280/–(ரூபாய் நாற்பத்தேழாயிரத்து இருநூற்று எண்பது மட்டும்) மன்றத்தின் ஒப்புதலுக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 2081/2020/எச்1**

13. பண்ணுருட்டி நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகன எண். TN 31 AH 7374 க்கு உரிய சில பழுதுகளினால் வாகனம் இயக்க மிக சிரமமாக உள்ளது எனவும், வாகனத்தில் நான்கு வீல்கள், பிரேக் மற்றும் கிரீஸ் பேக்கிங் மற்றும் பிரேக் செக்கப், ஆயில் சர்வீஸ், ரேடியேட்டர் சர்வீஸ், A/C சர்வீஸ், பிரண்ட் சப்னைசர், எண்டு பால் ஜாயிண்ட் & செக்கப், இன்ஞின் டெம்பர் ரேக் செக்கப் மற்றும் இதர பழுதுகள் சீர் செய்ய வேண்டியுள்ளதால் இதற்கு செலவாகும் தோராய செலவினமாக மகேந்திரா First Choice SR Car சிதம்பரம் நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளி ரூ. 30,337/– (ரூபாய் முப்பதாயிரத்து முன்னூற்று முப்பத்தேழு) மட்டும் பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட ஈப்பு வாகனத்தை சீர்செய்ய நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ே கோப்பு எண். 2147/2020/இ1**

14 .பண்ணுருட்டி நகராட்சியில் புரவி புயல் டிசம்பர் 2020–ம் மாதம் ஏற்பட்ட கனமழை மற்றும் புயல் வெள்ள சேதம் குறித்து தினசரி அறிக்கைகள் தயார் செய்தது. ஜெராக்ஸ் ஸ்பைரல் பைண்டிங் மற்றும் 25 ரிம் A4, 25 ரிம் Legal பேப்பர் வாங்கி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வழங்கியது மற்றும் டோனர் ரீபில் செய்தது மற்றும் புதிய டோனர் 3 எண்கள் வாங்கியது செலவினத் தொகை ரூ. 29,350/– யை வருவாய் நிதி கணக்கிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். /2020/பி1**

15 பண்ணுருட்டி நகராட்சியில் நிவர் புயல் டிசம்பர் 2020–ம் மாதம் ஏற்பட்ட கனமழை மற்றும் புயல் வெள்ள சேதம் குறித்து தினசரி அறிக்கைகள் தயார் செய்தது ஜெராக்ஸ் ஸ்பைரல் பைண்டிங் மற்றும் 25 ரிம் A4, 25 ரிம் Legal பேப்பர் வாங்கி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வழங்கியது செலவினத் தொகை ரூ. 28, 500/–யை வருவாய் நிதி கணக்கிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். /2020/பி1**

16. இந்நகராட்சியில் அன்றாடம் பயன்படுத்திவரும் பிரிண்டர்களுக்கான டோனர் 'மை' கீழ்வருமாறு.
1. HP Laser Printer (M1005) 12 A டோனர் = 30 எண்ணிக்கை
2. Xerox Copier டோனர் = 4 எண்ணிக்கை
வழங்குவதற்கு ஆகும் செலவினம் ரூ. 45,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். /2020/**

17. பண்ணுருட்டி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் குப்பை எடுக்க பயன்படுத்தப்பட்டு வரும் TATA Ace வண்டி எண். TN-31 BM 8052 தகுதி சான்று காலம் முடிவடைந்துவிட்டதாலும், தகுதி சான்று எடுக்கவும், அதில் உள்ள அனைத்து பழுதுகளையும் சரிசெய்யவும், பெயிண்டிங் மற்றும் புதியதாக ஐந்து செட் டயர் டியூப் மாற்றவும், அதற்கான அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான செலவித்தொகை ரூ.1.25 லட்சத்திற்கு (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் ஒப்புதலுக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும்
மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 588/2020/எச்1**

18. இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்பட்டு வரும் LMV வாகன எண்கள் 1. TN 31 BM 8024 2. TN 31 BM 8044, 3. TN 31 CX 1329 4.TN 31 CX 1327 மேற்கண்ட நான்கு டாடா ஏஸ் வாகனங்களின் டயர்கள் பழுதடைந்துள்ளதால் புதிய டயர்களின் அளவுகளான 155/80/12 கொண்ட டயர்கள் வாகனம் ஒன்றிற்கு தலா 5x4 வீதம் எண்ணிக்கையில் (டயர், டியூப்) சப்ளை செய்யும் பணிக்கு 14.12.2020–ம் தேதியில் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | M./s. காவியா டயர்ஸ்,<br>நெ.12, KPL பார்க்,<br>கடலூர் மெயின் ரோடு,<br>கன்னியக்கோவில், புதுச்சேரி. | – | ரூ. 51,300/–<br>அதிகம் |
| 2 | M./s. காவியா டயர்ஸ்,<br>நெ.58சி, கடலூர் மெயின் ரோடு,<br>சுபாஷிணி மஹால் எதிரில், பண்ருட்டி. | – | ரூ. 49,980/–<br>குறைவு |
| 3 | M./s. பிரவின் டயர்ஸ்,<br>நெ.63, அன்னை தெரசா நகர்,<br>விருத்தாசலம் மெயின் ரோடு,<br>உளுந்தூர்பேட்டை. | – | ரூ. 52,000/–<br>அதிகம் |

**அலுவலக குறிப்பு :** 1. வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் காவியா டயர்ஸ், பண்ருட்டி நிறுவனம் ரூ. 49,980/– குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 2105 / 2020 / எச்1**

19 இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்பட்டு வரும் TN31BM8044 என்ற வாகனத்தின் இன்ஜின் ஹெட் வேலை, கிளட்ச் பிளேட் மற்றும் கவரிங்

அசெம்பிளி, டீசல் பம்ப் மற்றும் நாசல் சர்வீஸ், ஏர் பிலடர் பழுதாகி உள்ளதை அகற்றி புதியதாக மாற்றவும், மேலும் டைமிங் பெல்ட் புதியதாக பொருத்தவும், அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களின் இருந்து 14.12.2020 ம் தேதியில் விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனதின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | நிறுவனத்தின் விலைப்புள்ளி (அதிகம் / குறைவு) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | M/s ஓம் சக்தி இன்ஜினியரின் ஒர்க்ஸ் DSN நகர், நெல்லிக்குப்பம் மெயின் ரோடு, காராமணிக்குப்பம், கடலூார். | – | ரூ. 33,394/– குறைவு |
| 2 | M/s விஜயலட்சுமி ஆட்டோ மொபைல்ஸ் 56, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், செம்மண்டலம் கடலூார். | – | ரூ. 36,108/– அதிகம் |
| 3 | திரு. M. லோகநாதன் 306/641 மெயின் ரோடு நெல்லிக்குப்பம். | – | ரூ. 37.528/– அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:–**

1) வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் M/sஓம் சக்தி இன்ஜினியரின் ஒர்க்ஸ், காராமணிக்குப்பம் நிறுவனத்தின் விலைப்புள்ளி ரூ. 33,394/– ஐ குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தனிஅலுவரின் முன்அனுமதிபெற்று உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்,
3) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிரந்து மேற்கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோ.எண்.2105/2020/எச்2)**

20 பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 33 வரை உள்ள 18 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் கெடிலம் ஆற்றின் அருகில் அமைந்துள்ள தலைமை நீரேற்றும் நிலையத்திலிருந்து வழங்கப்படும் தினசரி குடிநீரில் பொதுமக்களின் குடிநீர் பயன்பாட்டிற்கு சோடியம் ஹைபோகுளோரைடு (5.6%) (Sodioum Hypo Chloride Solution) கலந்து பாதுகாப்பான குடிநீர் வழங்க வேண்டி நாளொன்றுக்கு 110 லிட்டர் வீதம் (1 kg = 1.19 ltr) ஏழு மாதத்திற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.4,00,000/– (ரூபாய் நான்கு இலட்சம்) மட்டும் நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம்.

கோ. எண். /இ2/202

21. பண்ணுருட்டி நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் ( IUDM) 2018 –19 திட்டத்தின் கீழ் 30 KLD கொள்ளளவு கொண்ட Fecal Sludge Tretment Plant ரூ.**360.00** இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல் முறை ஆணை ந.க.எண் **26888** /UGSS–2/2018**–42** நாள் 09.02.2019 ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. முதன்மை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண். **26888** / **2018/ Do1** நாள் **08.03.2019** –ன் படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி **30.10.2019**ன் அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் M/s Vishnu Infrastructures,2/50 kangayam Palayam, Sulur, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை இந்நகர் மன்ற தீர்மானம் எண் **471** நாள் **29.11.2019** ன்படி ஏற்கப்பட்டு **18.12.2019** அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டது.

பண்ணுருட்டி நகராட்சியில் வி. ஆண்டிக்குப்பம் பகுதியில் **30** முடுனு கொள்ளளவு கொண்ட Fecal Sludge Tretment Plant அமைக்கும் பணிக்கு பொது மக்களிடமிருந்த ஆட்சேபனை வந்த வண்ணம் உள்ளதால் பணி தொடங்க கால தாமதம் ஏற்பட்டு தற்பொழுது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு இடத்திற்கான தீர்வு எட்டப்படும் தருவாயில் உள்ளது. மேலும் இத்திட்டத்தினை **31.08.2021**க்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டு பணிகள் மிக விரைவாக நடைபெற்று வருகிறது. எனவே மேற்கண்ட பணியை செயல்படுத்த திட்ட **துணை விதிகள் (By–law)** அமுல்படுத்த வேண்யுள்ளதால், துணை விதிகளை நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் பொது அங்கீகாரம் மற்றும் அனுமதி பெற தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தயார் செய்து அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோ.எண் 018/2019/இ1)**

**22.** திருமதி. காசியம்மாள் க/பெ. சக்கரபாணி என்பவர் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து பணிக்காலத்தில் **14.05.2013**ல் காலமானதால் ஈட்டியவிடுப்பு மற்றும் ஈட்டா விடுப்பு கணக்கு முடித்து தொகை வழங்கியதில் பிடித்தம் செய்த தொகையை மீள வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No. **5291/2019**ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் அரசு வழக்கறிஞர் திரு. வி. ஜெயபிரகாஷ் நாராயணன் என்பவர் ஆஜராகி நடத்தி தருவதற்கு வழக்கு கட்டணம் ரூ. **15000/–** வழங்க கோரி **10.11.2020**ல் கடிதம் கொடுத்துள்ளார். எனவே மேற்படி வழக்கு கட்டணம் வழக்கறிஞருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு** – 1. மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்கண்ட செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

கோ. எண். 420/2020/எச்1

**23.** பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 33 ஐஸ்வர்யா நகர் மற்றும் வார்டு எண் 17, நேதாஜி நகர் பகுதிகளில் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி செய்ய போதிய மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் இல்லாத காரணத்தால் வறட்சி காலங்களில் பற்றாக்குறை ஏற்பட்டு வருகிறது. மேலும், அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வசதி செய்ய போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் அத்தியாவசிய அடிப்படை வசதியான குடிநீர் வசதி செய்ய இயலாத நிலையில் உள்ளது. இப்பணியினை உடன் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், குடிநீர் அத்தியாவசிய பணியின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு இப்பணிகளை மேற்கொள்ள அத்தியாவசியமாகிறது. பார்வை 1ல் கண்டுள்ள அரசாணையின் படி சிறப்பு திட்டத்தின் கீழ் கீழ்கண்டுள்ள பணிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்திட ஆவண செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. (லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 17. நேதாஜி நகரில் புதியதாக 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்தல், குடிநீர் குழாய்கள் பதித்தல் மற்றும் சுற்று சுவர்அமைத்தல். | 50.00 |
| 2 | வார்டு எண் 33 ஐஸ்வர்யா நகரில் புதியதாக 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்தல், குடிநீர் குழாய்கள் பதித்தல் மற்றும் சுற்று சுவர்அமைத்தல். | 75.00 |
| | **மொத்தம்** | **125.00** |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிகள் அடிப்படை உட்கட்டமைப்பு வசதி (One – time special scheme for essential basic infrastructure work ) சிறப்பு திட்டத்தின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(கோ.எண் 1906/2020/இ2)

24. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 கடலூர் சாலையை ஒட்டியுள்ள சிவபார்வதி மஹால் எதிர்புறம் உள்ள மண்ணாளான மழைநீர் வடிகாலில் கடந்த நிவர் மற்றும் புரெவி – 2020 புயலால் பெய்த கனத்த மழையின் காரணமாக வார்டு எண். 19 தண்டுப்பாளையம் காலனி மற்றும் போலீஸ்லைன் தெருக்கள் 1 முதல் 7 வரை உள்ள தாழ்வான பகுதியிலிருந்து வரும் மழைநீரானது மேற்கண்ட சிவபார்வதி மஹால் எதிர்புறம் உள்ள சிறிய மழைநீர் வடிகாலில் மழைநீர் போதுமான அளவு வெளியேற இயலாத நிலையில் அருகில் உள்ள இணைப்பு கால்வாயான வாலாஜா கால்வாயில் மழைநீர் சிறிய அளவில் வெளியேறியவண்ணம் இருந்தது. இதனால் மேற்கண்ட தாழ்வான பகுதிகளில் அதிக நாட்கள் மழைநீர் தேங்கியவண்ணம் இருப்பதால் அப்பகுதி மக்களுக்கு பொது சுகாதார சீர்கேடு ஏற்பட வாய்ப்புள்ளது.

மேலும் மழைநீரை அகற்றி போக்குவரத்தை சீர்செய்யவும் மற்றும் டெங்கு மற்றும் இதர மர்ம காய்ச்சல் ஏற்படுவதை தடுக்கவும், பொதுமக்களிடமிருந்து கைபேசி மூலம் புகார்கள் வந்தவண்ணம் இருந்தது. எனவே, சிவபார்வதி மஹால் அருகில் உள்ள மழைநீர் வடிகால் வசதி மற்றும் கடலூர் சாலையில் உள்ள சிறுபாலத்தின் வழியாக வாலாஜா கால்வாயில் மழைநீர் மிக விரைவாக வெளியேறும்வண்ணம் புதிதாக மழைநீர் வடிகால் வசதி அமைக்கவும் மற்றும் பருவமழை காலங்களில் மேற்கண்ட தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்குவதை தடுக்கவும், மேற்கண்ட சிவபார்வதி மஹால் எதிர்புறமுள்ள மண்ணாலான (Katcha) கால்வாயை சீரமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.9.90 இலட்சம் (ரூபாய் ஒன்பது லட்சத்து தொண்ணூராயிரம்) மட்டும் தயாரிக்கப்பட்டுள்ளதை நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோ. எண்.

25. பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 22 கும்பகோணம் பிரதான சாலையில் அரசு பொது மருத்துவமனையை ஒட்டி அமைந்துள்ள அம்மா உணவகத்தின் மேல்கூரை பழுதடைந்தும் Steam Boiler பழுதடைந்தும் உள்ளதால் உணவு தயாரிக்க இயலாத நிலை ஏற்பட்டு உள்ளது. மேலும் மழைக்காலங்களில் பழுதடைந்த மேற்கூரை வழியாக மழைநீர் கசிந்து உணவு பொருட்கள் வைக்க இயலாத நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே, பழுதடைந்த மேற்கூரை Steam Boiler மற்றும் அதில் பழுதடைந்துள்ள மின் விளக்குகள், மாற்றி சீரமைக்க உத்தேச செலவினம் ரூ.0.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோ. எண்.

26. துணை இயக்குநர் சுகாதார பணிகள், கடலூர் அவர்களின் ந.க.எண். 6873/ஆ4/2019 நாள். 30.12.2019 மண்டல நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் தெரிவித்துள்ளவாறு டெங்கு கொசு ஒழிப்பு பணிக்காக வரும் காலம் மழைக்காலம் என்பதால் நோயின் தீவிரத்தை கட்டுப்படுத்த ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரை உள்ள 90 நாட்களுக்கு 200 வீடுகளுக்கு ஒரு தற்காலிக பணியாளர் வீதம் நியமித்து 50 DBC பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு மாவட்ட ஆட்சித்தலைவரின் கடிதத்தில் தெரிவித்துள்ள ஊதிய விகிதப்படி ஜான்சிராணி மகளிர் சுய உதவிக்குழு மூலம் பணி செய்வதற்கும், அதற்கான உத்தேச செலவினத்திற்கும் ஆகும் செலவினம் ரூ.10.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. DBC பணியாளர்கள் 50 நபர்களை நியமித்து ஜான்சிராணி சுய உதவிக்குழு மூலம் நாள் ஒன்றுக்கு பணியாளர் ஒருவருக்கு ரூ.200 வீதம் வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோ. எண். 2486/எச்1/2020

இடம்– பண்ணுருட்டி நகராட்சி
நாள்– 31–12–2020

ஆணையாளர் (ம) தனி அலுவலர்
பண்ணுருட்டி நகராட்சி.